# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 154 · திங்கள் Monday · 31.08.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


# அமராவதி அணையில் இருந்து நீர் திறப்பு; முதலமைச்சர் விஜய் உத்தரவு



திருப்பூர் மாவட்டம் உடுமலைஅருகேஉள்ள அமராவதி அணையில் இருந்து இன்று (ஆகஸ்ட் 30) முதல் தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது.

முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் உத்தரவின்பேரில், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமராவதி ஆற்றை நம்பி செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டங்களுக்கு போதுமான நிலத்தடி நீர் கிடைப்பதைஉறுதிசெய்யவும், இரு மாவட்ட மக்களின் குடிநீர்தேவையை பூர்த்தி செய்யவும் அணையில் இருந்து தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, அமராவதி அணையின் ஆற்று மதகு வழியாக இன்று முதல் செப்டம்பர் 7-ந்தேதி வரை தினமும் வினாடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 8 நாட்களுக்கு இந்த நீர் திறப்பு மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் நாட்களில் போதிய மழைப்பொழிவுஏற்பட்டு அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்தால், நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தை பொறுத்து கூடுதலாக 4 நாட்களுக்குதண்ணீர்திறப்பை நீட்டிக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. அந்த காலகட்டத்திலும் தினமும் வினாடிக்கு 1,000 கனஅடி வீதமே தண்ணீர் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(

தற்போது எல் நினோ தாக்கம் காரணமாக போதிய மழைப்பொழிவு இல்லாத சூழல் நிலவி வருவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அமராவதி ஆற்றைச் சார்ந்த பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதும், குடிநீர் தட்டுப்பாட்டை தவிர்ப்பதும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அமராவதி அணையின் நீரை நம்பி திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் குடிநீர் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் ஆற்றைச் சார்ந்த பகுதிகளில் குடிநீர் தேவையை சமாளிக்க உதவியாக இருக்கும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

அணையின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தை தொடர்ந்து கண்காணித்து, அதற்கேற்ப தண்ணீர்திறப்புதொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நீர்வளத்துறைதெரிவித்துள்ளது.

# நேபாளத்தில் சிக்கிய தமிழர்களில் 219 பேர் பத்திரமாக மீட்பு; அமைச்சர் ராஜ்மோகன் தகவல்




சென்னை: நேபாள பெருவெள்ளத்தில் சிக்கியவர்களில் தமிழர்களில்219பேர்மீட்கப்பட்டு, அவர்கள் ஆகஸ்ட் 31-ஆம் தேதிக்குள் தமிழ்நாடு வருவார்கள் என்று அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கியதமிழ்நாட்டைசேர்ந்தவர்களை மீட்கும் நடவடிக்கைக்காக முதலமைச்சர் விஜய் உத்தரவின்பேரில், அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, ராஜ்மோகன், தென்னரசு, வினோத் ஆகியோர்அடங்கிய குழு டெல்லி சென்றது. அங்கு மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட பிறகு நேற்று (ஆகஸ்ட் 29) இரவு அமைச்சர்கள் குழுவினர் டெல்லியில் இருந்து விமானம் மூலம் சென்னை திரும்பினர்.

அப்போது விமான நிலையத்தில் அமைச்சர் ராஜ்மோகன் செய்தியாளர்களிடம் பேசியபோது, "கடந்த 3 நாட்களாக முதலமைச்சர் விஜய் உத்தரவின்படி, நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்கும் நடவடிக்கைக்காக டெல்லியில் முகாமிட்டு பல்வேறு பணிகளை மேற்கொண்டோம்.

தற்போது அயலகதமிழர் நலத் துறை அமைச்சர் தென்னரசு டெல்லியில் தங்கி மீட்பு பணிகளை கண்காணித்து வருகிறார். மீட்பு நடவடிக்கை தொடர்பாக சட்டமன்றத்தில் விரிவான அறிக்கையை சமர்பித்துள்ளோம். இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் விஜய் தலைமையில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அடுத்தக்கட்ட நடவடிக்கையாக அமைச்சர்கள் குழு டெல்லி சென்றோம்.டெல்லிதமிழ்நாடு இல்லத்தில் வார் ரூம் அமைக்கப்பட்டது. நேபாள பெருவெள்ளத்தில் சிக்கியவர்களின் குடும்பத்தினருக்காக 4 வகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்திய வெளியுறவுத்துறை செயலாளரை நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினோம்.

பெருவெள்ள மீட்பு பணிகள் தொடர்பாக, இந்தியா - நேபாளம் நாடுகள் இணைந்து மேற்கொள்ளும் மீட்புப் பணிகள், இந்திய அரசுடன் தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றை தீவிரப்படுத்தினோம்.

தமிழ்நாட்டில் இருந்து 319பேர்பல்வேறு குழுக்களாக நேபாளம் சென்றுள்ளனர். இதில் 219 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் வரும் 31-ஆம் தேதி இரவிற்குள் தமிழ்நாட்டிற்கு வருவார்கள்.

மீதமுள்ள 100 பேரை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. நேபாளத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் சர்வதேச பேரிடராக உள்ளது.பலநூறுகிலோ மீட்டர் தூரத்தில் கூட உடைமைகள் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இந்தியா மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த ராணுவங்களும் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளன.

முதற்கட்டமாக மீட்கப்பட்ட 21 பேர் டெல்லி வரவழைக்கப்பட்டனர். அதாவது, கும்பகோணம் ஏஜென்சி மூலம் சென்ற 57 பேரில் 21 பேர் பத்திரமாக சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர். இந்த குழுவில் சென்ற மீதம் 36 பேரை தேடும் பணியின் நடைபெற்று வருகின்றன.ஆத்மஞான குழு சார்பாக 150 பேர் சீனா எல்லை வழியாக காத்மாண்டு சென்றுள்ளனர். இவர்கள் பல்வேறு விமானங்களின் மூலம் இந்தியாவிற்கு வந்துகொண்டு இருக்கிறார்கள்.

இவர்களை தவிர 39 பேர் கொண்ட குழுவும் நேபாளம் சென்றுள்ளது.அவர்களும்பத்திரமாகஉள்ளனர்.இதில் 31 பேர் வருகிற 31-ஆம் தேதி மாலைகோவைக்கு வருவார்கள். மீதமுள்ள 6பேர்சென்னைக்குவருவார்கள்.

மகாதேவி யாத்திரா மூலம் நேபாளத்திற்கு சென்ற 49 பேர் எங்கு இருக்கிறார்கள் என்பது தொடர்பாக தற்போது வரை தகவல் தெரியவில்லை. இந்த நேரத்தில் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். ஹெலிகாப்டர் மூலம் மீட்பு பணிகள், மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கேரளாவில் நடந்த நிலச்சரிவில் மீட்பு பணியில் ஈடுபட்டவர்கள், நேபாளத்தில் தற்போது மீட்புபணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த சமயத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இந்த நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்க வேண்டும் என்பதே ஒரேநோக்கமாகஉள்ளது. மத்திய அரசின் வார் ரூம் மூலமாக மீட்புப்பணிகள் விரைவாகநடைபெற்று வருகின்றன" என்று தெரிவித்துள்ளார்.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் செப்டம்பர் 3 வரை அதிகபட்ச வெப்பநிலை 5 டிகிரி உயரும்



சென்னை: தமிழகத்தில் நாளை முதல் செப்.3 வரை ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஆக.31) மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமானமழையும்,இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

செப்.1, 2 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை,செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

3-ம் தேதி மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், சென்னை,செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம்,மதுரை,சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

4, 5 தேதிகளில் மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் செப்.3-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக சேலம், நீலகிரி மாவட்டம் நடுவட்டம், சேலம் மாவட்டம் அழகாபுரம் ஆகிய இடங்களில் தலா 3 செமீ, நீலகிரி மாட்டம் பார்வூட், சேலம் மாவட்டம் சந்தியூர் ஆகிய இடங்களில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில்கூறப்பட்டுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/

CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி பணகுடியில் அரசின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா?

## பேரவையில் டாக்டர் எஸ்.கே.கிறிஸ்டோபர் எம்.எல்.ஏ. கேள்வி



ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பணகுடியில் தமிழக அரசின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா? என சட்டப்பேரவையில் டாக்டர் எஸ். கே.கிறிஸ்டோபர் எம்எல்ஏ கேள்வி எழுப்பினார்.இதற்குப் பதிலளித்த உணவுத் துறை அமைச்சர் வெங்கடரமணன் இது குறித்து குழு அமைத்து ஆய்வு செய்து உரியநடவடிக்கைஎடுக்கப்படும் என்றார்.தமிழக சட்டப்பேரவையில்நடந்துவரும் கூட்டத் தொடரில் பங்கேற்ற நெல்லை மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.கே.கிறிஸ்டோபர் கேள்வி நேரத்தின் போது பேசுகையில் ராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பணகுடியில் அரசு சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து உணவுத்துறை அமைச்சர் வெங்கடரமணன் கூறுகையில் ராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பணகுடி பகுதியில் அரசின் நேரடி கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்த சாத்தியக்கூறுகள் பற்றி விரிவாக ஆய்வு செய்ய குழு அமைத்து அதன் அடிப்படையில் மாவட்ட நிர்வாகம் மூலம் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்க் கொள்ளப்படும் என்று கூறினார்

# இந்திய ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு கூட்டம்

## தோழர் ரா. தனபால் ஆர். ரஜினி பாலாஜி ஆகியோர் தலைமையில் ஈரோடு மாவட்டம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது



கடந்த 25. 8.2026 அன்று இந்திய ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு கூட்டம் தோழர் ரா. தனபால் ஆர். ரஜினி பாலாஜி ஆகியோர் தலைமையில் ஈரோடு மாவட்டம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது அதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சி ஜோசப் விஜய் அவர்களுக்கு இந்திய ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியின்கோரிக்கைகடிதம். முதல்வர் அவர்களே வணக்கம். எம் எல் ஏ க்களுக்கு கார் வழங்கும் திட்டத்தை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று கோரிக்கையை முன் வைக்கிறேன். தேர்தலின் போது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமெனவும் அதேபோல் கார் இல்லாத எம் எல் ஏ க்களுக்கு கார்கள் வழங்குவது தவறு ஏதுமில்லை,ஆனால்முதலில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இப்படி ஒரு முடிவு எடுத்தது மக்களுக்கு ஒரு ஏமாற்றம்தானே! மக்கள் தமிழ்நாட்டில் ஒரு மாற்றம் தேவை என்று தான் 60 ஆண்டுகளாக ஆண்டு கொண்டிருந்த கட்சிகளை எல்லாம் பார்க்காமல் தங்களின் டி வி கே வேட்பாளர்கள் யார் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்ன செய்கிறார்கள் அவர்கள் முகங்கள் பார்க்காமல் விஜய் என்ற உங்களின் உள்ளத்திற்கும் உங்களின் முகத்திற்கும் மக்கள் வாக்களித்து டி வி கே வை வெற்றி பெற செய்து உங்களை முதல்வராக்கி ஆட்சி கட்டிலில் அமர்த்தினார்கள் தாங்கள் தேர்தலின் போது மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை தந்தீர்கள் மக்களும் தங்களின் மீது நம்பிக்கை கொண்டு இருந்தார்கள் பின் முதல்வர் பொறுப்பேற்ற பின் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற கால அவகாசம் தேவை என்று சொன்னதும் மக்கள் பொறுமை காத்திருக்கும் வேளையில் ஒரு எம் எல் ஏ வின் சுயநலத்தின் கோரிக்கைக்கு தாங்கள் செவி சாய்த்து திடீரென எம் எல் ஏ க்களுக்கு கார் வழங்குவதாக அறிவித்து,கார் பராமரிப்பு செலவு ரூ.75 ஆயிரம், உதவியாளர்களுக்கு ரூ.25000 என்று அறிவித்துள்ளதை தமிழக மக்களின் இதயங்களை கலங்க செய்துள்ளது. ஒவ்வொரு எம்எல்ஏக்களுக்கும் கார் மற்றும் பராமரிப்பு செலவுக்கு மாதம் 75,000 உதவியாளர்களுக்கு 25,000 என்று அறிவித்துள்ள முதல்வர் அந்த தொகையை சுமார் 20,000 வீடு இல்லாத ஏழை மக்களுக்கு தலா ஒருவருக்கு ஒரு சென்ட் விட்டு மனைவிடம் தனியார்களிடமிருந்து வாங்கி அரசே வழங்கலாம் 20 ஆயிரம் குடும்பங்கள் வாழ குடியிருக்க இடம் கிடைத்து விடும் காலம் முழுவதும் உங்களை வாழ்த்தி வணங்குவார்கள் ” "மக்கள் பணம் ஒரு பைசா கூட மாட்டேன் யார் தவறு செய்தாலும் விடமாட்டேன்" என்று வாக்குறுதியை அளித்தது மக்கள் மனதில் பதிந்து விட்டது. இனி தமிழ்நாட்டில் நல்ல ஒரு ஆட்சி அமைந்துவிட்டது மக்கள் தேவைகள் எல்லாம் நிறைவேறும் என்று பல கட்சித் தலைவர்கள் பெருமை கொண்டிருந்தோம் தமிழ்நாட்டு மக்களின்வாழ்வாதாரதேவைகள் அதிகம் உள்ளது. அதற்கு தீர்வு காண வழிவகை செய்ய வேண்டும். பல லட்சங்கள் செலவு செய்து கடன்களைவாங்கி படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாத நிலை, விவசாயிகளின் கோரிக்கைகள் எப்போது நிறைவேறும் பெண்களின் கடன் சுமை அதிகரிப்பு அதிலிருந்து பெண்களை எப்படி மீட்டு எடுப்பது, மின்கட்டண உயர்வால்மூடி வரும்சிறு குறு தொழிற்சாலைகள், கைத்தறிநெசவுத்தொழில் 80%சதவீதம் அழிந்துவிட்டது, அதனால் லட்சக்கானக்கானோர் வேலை இழந்து வாழ்வாதார சீரழிவு. குடியிருக்க சொந்த வீடு இல்லாதஏழைமக்களின் கண்ணீர் துடைக்க என்ன வழி?கேப்பாரற்று கிடந்த புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் ஏழை சாமானியமக்களின்வீடுகளை அரசு ஜே சி பி கொண்டு இடித்து மக்களை துன்புறுத்தும் அவல நிலை உள்ளது. குடியிருக்கும்வீடுகளுக்கு பட்டாக்கள் எளிதில் கிடைப்பதில்லை. மது போதை பொருளினால் இளைஞர்களும்,உழைக்கும் தொழிலாளர்களும் போதைக்கு அடிமையாகி இன்று கோடிக்கணக்கான குடும்பங்கள் சீரழிந்து வரும் நிலை நீடிக்கிறது. போதைக்கு அடிமையானவர்க ளை மீட்டெடுக்க என்ன திட்டம் உள்ளது? பூரண மதுவிலக்கை அமல்படுத்த என்ன திட்டம் உள்ளது? அதேபோல் மது போதை பொருட்களை ஒழிக்க வேண்டும், திருட்டு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு,பாலியல் வன்கொடுமைகள் பெருகிவிட்டது. இதை தடுக்க என்ன வழி?அரிசி, பருப்பு,சர்க்கரை மற்றும் மக்கள் அன்றாடும் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வவை தடுக்க என்ன வழி? தூய்மை பணியாளர்கள்பலஆண்டுகளாக பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராடி வருகிறார்கள் அதற்கு என்ன வழி? செவிலியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் மற்றும்தூய்மைபணியாளர்கள் பணி நிரந்தரம் கோரிக்கைக்கு கோரிக்கை வைத்து போராட்டங்கள் நடத்தி ஓய்ந்துபோய்விட்டார்கள் இதற்கு என்ன தீர்வு ? சாலை வாகன விபத்துகளில் இளைஞர்களின் மரணங்கள் அதிகரித்து விட்டது சாலைகளில் வாகன விபத்துக்கள் தடுக்க என்ன திட்டம் உள்ளது? மக்கள் நோய் நொடிகள் அதிகரிப்பு,அதை தடுக்க நோயாளியாக இருக்கும் மக்களை காப்பாற்ற என்னஎன்னஆய்வுசெய்யலாம்? தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு செல்லும் நோயாளி மக்களிடம் சிகிச்சை என்ற பெயரில் நூதன முறையில் கோடி கோடியாய் மக்கள் பணம் கொள்ளை போகிறது இதை தடுக்க என்ன வழி? மற்றும் மருத்துவ மனைகளில் வருமானவரி சோதனை ஏன் நடப்பதில்லை? அதேபோல் மத்திய அரசின் மெத்தனப் போக்கினால் மக்கள் படும் இன்னல்கள், ஜி எஸ்டி வரி,நீட் தேர்வு ரத்து செய்ய வலியுறுத்தி மாணவர்களின், இளைஞர்களின் போராட்டங்கள் நீடிக்கிறது. பெட்ரோல்,டீசல், சமையல் கேஸ் சிலிண்டர்கள் விலை உயர்வு மக்களை பெரிதும் பாதித்து வருகிறது.தங்கம் விலை உயர்வு விண்ணை தொட்டுவிட்டது. இனி ஏழை நடுத்தர மக்களின் இல்ல திருமண விழாவில் திருமண பெண்களுக்கு தங்கம் வாங்க முடியாத நிலை, ஏழை வீட்டு திருமண பெண்களுக்கு கவரிங் நகை தான் அணிவிக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்தி விட்டார்கள்!. தேசிய நெடுஞ்சாலைகள் அமைத்து அதில் சுங்க சாவடிகள் அமைத்து வாகனங்கள் மூலமாக வரி என்ற பெயரில் மக்கள் பணம் பல லட்சம் கோடிகள் கொள்ளை போகிறது.இது போன்ற பிரச்சனைகள் மக்களுக்கு பல நூறு உள்ளது தமிழகத்தில் 8 கோடி மக்களின் வாழ்வாதாரத்திற்கு ம் நாட்டின் வளர்ச்சியை பற்றியும் பேச வேண்டிய சட்டமன்ற கூட்டத்தில் சில சட்டமன்ற உறுப்பினர்கள் பட்டுப்பாடிக்கொண்டும் ஒருவருக்கொருவர் கேலி கிண்டல் செய்துவருவதும், சில சட்டமன்ற உறுப்பினர்கள் சில அமைச்சர்கள், மூத்த சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் என்று ஒருவர்மீதுஒருவர்குறைகளைசொல்லிக்கொண்டு மாமன்றத்தில்வீண்வாக்குவாதங்களை செய்து கொள்வதினால் மக்களுக்கு எவ்வித பலனும் அளிக்காது,இதை எல்லாம்குறிப்பிடுகின்றகாரணம் புனிதமான மாமன்றத்தில் முன்பு இருந்த ஆட்சியாளர்கள்பல திட்டாங்களும், சட்டங்களும் நலஉதவிக்களும் இந்த மாமன்றத்தின் மூலமாக கொடுத்துள்ளார்கள், இது எவராலும் மறுக்கமுடியாத உண்மை!.நமது நாடு சுதந்திரம் பெற்றும் மக்கள் பசி பட்டினி பஞ்சம். அரிசி பருப்பு உணவு பொருட்கள் உற்பத்தி இல்லை சாதிய வன்கொடுமைகள் கொத்தடிமை தொட்டால் தீட்டு பார்த்தால் பாவம் தீண்டாமை பெண் அடிமை கல்வி இன்மை கைநாட்டுக்கள் மின்சாரம் சாலை வசதிகள் இல்லை தெருக்களில் சாக்கடை மின்கம்பங்கள் இல்லை காங்கிரட் கட்டிடங்களும் மாட மாளிகைகளும் இல்லை, பாலங்களும் தரமான தார் சாலைகளும் இல்லை,நீர் வளமும் இல்லை உணவுப்பொருள் விவசாய உற்பத்தி சரிவரவில்லை, மலையை நம்பி விளைநிலங்கள் ஏழை எளியோர் மற்றும் நடுத்தரப் மக்களின் பிள்ளைகளுக்கு படிக்க சரியான கல்லூரிகள் இல்லை உயர் கல்லூரிகள் இல்லை தொழிற்சாலைகள் இல்லை இப்படி எதுவும் இல்லாத இருண்டு கிடந்த தமிழ்நாட்டில் கடந்த 65ஆண்டுகளாகதி மு க,அ தி மு க ஆகிய இரண்டு கட்சிகளும் தமிழ்நாட்டை ஆண்டு ஒன்றை ஒன்று போட்டி போட்டுக் கொண்டு மக்களின் வறுமையை ஒழித்தார்கள்! மக்களின் வாழ்வாதார தேவைகள் அனைத்தும் செய்து தந்தார்கள். கல்வியை தந்தார்கள் ஏழை சாமானிய மக்களின் பிள்ளைகளை ஐஏஎஸ்,ஐபிஎஸ்என்றும்ஒவ்வொரு வீடுகளிலும் பட்டதாரிகள் ஆக்கினார்கள், வழக்கறிஞர் ஆக்கினார்கள்! நீதி அரசர்கள் ஆக்கினார்கள்! உயர் காவல் அதிகாரிகள் ஆக்கினார்கள்! கலெக்டர் ஆக்கினார்கள்! சட்ட வல்லுநர்கள் ஆக்கினார்கள்! மருத்துவர்கள் ஆக்கினார்கள்! இன்ஜினியர்கள் ஆக்கினார்கள்! அரசியல்ஆட்சிஅதிகாரத்தில் அமைச்சர்களாக ஆக்கினார்கள்! இந்தியாவிலேயேஒருசிறந்தஉயர்ந்த தமிழ் நாடாக உருவாக்கினார்கள்!இத்தனைசெய்த இவர்கள் லஞ்சத்தை ஒழிக்கதவறிவிட்டார்கள், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை தர தவறி விட்டார்கள், மதுவை மது கடைகளை கொண்டு வந்து உழைக்கும் மக்களை சீரழித்து விட்டார்கள், மதுக்கடைகளினால் ஆண்கள் உழைத்து சம்பாதிக்கின்ற பணத்தை மதுபான டாஸ்மாக் கடைகளுக்கு கொடுத்து விடுகிறார்கள். இதனால் பெண்கள் தங்கள் குடும்பங்களை நடத்த முடியாமல் கடன்களை வாங்கி தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்கவும், தங்கள் வாழ்வாதாரத் தேவைக்கும் கடன்களை வாங்கி இன்று பெண்கள் கஷ்டப்படும் நிலையை உருவாக்கி விட்டார்கள். இதனால்தான் உங்கள் மீது நம்பிக்கை வைத்து ஆட்சி மாற்றம் கொண்டுவந்தார்கள். விஜய் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் பெண்கள் இளைஞர்களின் துயரங்கள் நீங்கிவிடும் தமிழ்நாடு பெரிய அளவில் வளர்ந்து விடும் என்று எதிர்பார்க்கிறார்கள் எனவே உங்கள் மீது நம்பிக்கைவைத்துள்ள மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தாருங்கள். மக்களின் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாக கூடாது என்ற நல்ல எண்ணத்தில் தான் உங்களின் கவனத்திற்கு இக்கோரிக்கை கடிதம் அளித்து உள்ளேன். இப்படிக்கு தங்கள் அன்புள்ள அ.சுபஹான் பொது செயலாளர் இந்திய ஜீவாகம்யூனிஸ்ட் கட்சி. வாழ்க! வளர்க! முதல்வர் விஜய்அவர்கள். தொடரட்டும் உங்களின் மக்கள் பணி! வணக்கம்.



மதுரை மாவட்டம்,அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு தொடர்புடைய அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள்,மாநகர காவல் ஆணையாளர் திரு. எஸ். ராஜேந்திரன், இ.கா.ப., அவர்கள்,சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.வி. கருப்பையா அவர்கள்,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.எம்.கோபிசன் அவர்கள்,மதுரை மத்திய சட்டமன்ற உறுப்பினர் திரு.மதார் பதூருதின் அவர்கள்,மாநகராட்சி துணை ஆணையாளர் திரு.ஜெய்னுலாப்தீன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி கடையம் வடக்கு ஒன்றியம் சேர்வைக்காரன்பட்டி ஊராட்சி அருணாசலம் பட்டி மூத்த கழக முன்னோடி T.R .குத்தாலிங்கம் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவ ஓய்வில் இருந்து வருவதை அறிந்து இன்று நானும் ஒன்றிய கழகச் செயலாளர் மகேஷ் மாயவன் அவைத்தலைவர் ஆ.ரவி மாவட்ட பிரதிநிதிகள் ச.ரவி சுப்பிரமணி,துரைப்பாண்டியன், அன்பழகன்ஆத்மா சேர்மன் குணசீலன், கழக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் லட்சுமணன் பாக முகவர்கள் பாலமுருகன்,விடியல் ஆர்த்தி,ராஜபாண்டியன்,ராமர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நேரில் சென்று பழங்கள் மற்றும் மருத்துவ உதவி தொகை வழங்கினோம் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 300 நபர்களுக்கு 5 கிலோ அரிசி மற்றும் 100 நபர்களுக்கு சேலை விளங்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அந்த ஊரில் கழக கல்வெட்டுடன் கழக கொடி கம்பம் அமைவதற்கு உறுதுணையாக இருந்து பணி செய்தவர் தற்போது உடல்நிலை என்று அறிந்தவுடன் அவரது இல்லத்திற்குநேரில்சென்றுஉடல்நலம்விசாரித்தோம்தொடர்ந்துகழகப்பணிசெய்திடவேண்டும்என்றுவேண்டுகிறோம்

# 85 தெருவோர வியாபாரிகளுக்கு முத்தூட் பைனான்ஸ் சமுக பொறுப்பின் மூலமாக இலவச குடைகள் வழங்கும் நிகழ்ச்சி



முத்தூட் பைனான்ஸ் நிறுவனத்தின் சமூக பொறுப்பு (CSR) திட்டத்தின் கீழ், **கல்வி, பெண்கள் முன்னேற்றம், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு** உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சமூக மேம்பாட்டிற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, சென்னை கொடுங்கையூரில் உள்ள எம்மியா நினைவு அறக்கட்டளை அலுவலகத்தில், தெருவோர வியாபாரிகளின் அன்றாட வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் **85 தெருவோரவியாபாரிகளுக்கு இலவச குடைகள் வழங்கும் நிகழ்ச்சி** 29.08.2026 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் NDSO நிறுவனர் திரு. பிரபாகர், NDSO மூத்த நிர்வாகி திரு. சங்கர், எம்மியா நினைவு அறக்கட்டளை நிறுவனர் திரு. சிலம்பரசன், மெட்ராஸ் ரோட்டரி கிளப்பைச் சேர்ந்த திரு. ரவிக்குமார், சென்னை உளவுத்துறை காவல் ஆய்வாளர் திரு. ராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு குடைகளை வழங்கினர்.

முத்தூட் பைனான்ஸ் சார்பில் சென்னை மண்டல CSR மேலாளர் திரு. ரமேஷ் கண்ணா, மண்டல மார்க்கெட்டிங் மேலாளர் திரு. சோபன் பாபு, சென்னை மத்திய மண்டல நிர்வாக மேலாளர் திரு. பாரதிதாசன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மேலும், கிளஸ்டர் மேலாளர் திரு. விஸ்வா, திரு.மாரிமுத்து,மண்டல மார்க்கெட்டிங் மேலாளர் திரு. திருநாவுக்கரசு, கிளை மேலாளர்கள் திரு.பாலாஜி,திரு.மணிகண்டன், திரு. ஹரி கிருஷ்ணா, திரு. மகேஷ், முத்தூட் பைனான்ஸ் Loan at Home குழுவினர் மற்றும் எம்மியா நினைவு அறக்கட்டளையின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. எஸ்தர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பல்வேறு தன்னார்வ அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், முத்தூட் பைனான்ஸ் ஊழியர்கள், பயனாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பொதுமக்கள் என பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# அதிக சர்க்கரை கொண்ட பாக்கெட் உணவுகளில் எச்சரிக்கை லேபிள்




புதுடெல்லி: பாக்கெட் உணவுகளின் ஊட்டச்சத்து சார்ந்த அபாயங்கள் குறித்து நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அதிகளவு சர்க்கரை, உப்புமற்றும்கொழுப்பு கொண்ட பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் முன்புறத்தி ல் எச்சரிக்கை வாசகக் குறிப்பை அறிமுகப்படுத்தக்கோரி உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், பாக்கெட் உணவுகளில் எச்சரிக்கை வாசகங்கள் அடங்கிய குறிப்பை அறிமுகப்படுத்த இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்துக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், கடந்த 13-ம் தேதி இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, உத்தரவை செயல்படுத்த எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கடும் அதிருப்தி தெரிவித்த உச்ச நீதிமன்றம், நாட்டு மக்கள் ஆரோக்கியமாக இருக்கக் கூடாதா? குறிப்பாக, வளரும் குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டாமா? பாக்கெட் உணவுகளில் எச்சரிக்கை அறிவிப்பு செய்வதில் என்ன தயக்கம்? என கோபமாக கேள்விகள் எழுப்பி, 2 வாரத்துக்குள் உரிய நடவடிக்கை எடுக்க மீண்டும் உத்தரவிட்டது.

இதையடுத்து, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், இவ்வழக்கில் 6 பக்க அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அதில், அதிக சர்க்கரை, உப்பு மற்றும் கொழுப்பு கொண்ட பாக்கெட் உணவுகளின் முன்புறத்தில் சிவப்பு நிற அறுகோண வடிவ எச்சரிக்கை லேபிள் இடம்பெறும் என்று முன்மொழிந்துள்ளது.

முதற்கட்டமாக, 2 அல்லது அதற்கு மேற்பட்ட ஊட்டச்சத்துக்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாக இருந்தால் எச்சரிக்கை லேபிள் இடம்பெறும் என்றும், 2-வது கட்டத்தில் ஏதேனும் ஒரு ஊட்டச்சத்து அதிகமாக இருந்தாலே எச்சரிக்கை லேபிள் இடம்பெறும் வகையில் விதிமுறையை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.



## தூத்துக்குடி தாமோதரன் நகரில் மின்னொளி கபடி போட்டி 2ம் நாள் ஆட்டத்தை மேயர் ஜெகன் தொடங்கி வைத்தார்

தூத்துக்குடி சண்முகபுரம் தாமோதரன் நகர் மெயின்ரோட்டில் உள்ள செல்வ விநாயகர்- சந்தன மாரியம்மன் கோவில் கொடை விழாவை முன்னிட்டு, இளைஞர் அணி சார்பில் எம்.ஜே. கன்ஸ்ட்ரக்ஷன் உரிமையாளர் முருகேசன் நாடார் 2-ம் ஆண்டு நினைவு கோப்பைக்கான கபடி போட்டி நடைபெற்று வருகிறது.

இதன் இரண்டாம் நாள் போட்டியை மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தொடங்கி வைத்தார். முன்னதாக கோவில் நிர்வாகம் சார்பில் மேயருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து கோவிலில் சாமி தரிசனம் செய்த மேயருக்கு,விளையாட்டு வீரர்கள் பூங்கொத்து வழங்கி வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் கோவில் நிர்வாகி அந்தோணி ராஜ், மாமன்ற உறுப்பினர்கள் பாப்பாத்தி, சுரேஷ்குமார், முன்னாள் மாமன்ற உறுப்பினரும் திமுக வட்டச் செயலாளருமான ரவீந்திரன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கோட்டுராஜா, சி.எஸ். ராஜா, ராமர், பேச்சிமுத்து, ஏசுவடியான், கபடி கந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முதல் ஆட்டத்தில் சென்னை சாய் அணி 42-18 என்ற புள்ளிக்கணக்கில் திருச்சி ஆதவன் அணியைவீழ்த்திவெற்றி பெற்றது. இரவை பகலாக்கும் வகையில் மின்னொளி வசதியுடன் நடைபெற்ற கபடி போட்டியை ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.

## தூத்துக்குடி மாதாநகர் ஸ்ரீ சந்தனமாரி அம்மன் கோவில் 44ம் ஆண்டு கொடை விழா

### மாவீரர் அன்னதானத்தை தொழிலதிபர் எம்.சி.முருகேச பாண்டியன் துவக்கி வைத்தார்



தூத்துக்குடி மாதாநகர் அருள்மிகு ஸ்ரீ சந்தனமாரி அம்மன் திருக்கோவிலில் 44-ம் ஆண்டு கொடை விழாவை முன்னிட்டு, மாதாநகர் MST கபடி குழு சார்பில் மாவீரர் அன்னதானம் ஸ்ரீசந்தனமாரி அம்மன் கோவில் திடலில் நடைபெற்றது.

இதையொட்டி 31.08.2026,01.09.2026 மற்றும் 02.09.2026 ஆகிய மூன்று நாட்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் அன்னதானம் நடைபெறுகிறது.

மேலும்,30.08.2026 மற்றும் 31.08.2026 ஆகிய தேதிகளில் மதியம் மற்றும் இரவு நேரங்களில் அன்னதானத்தை சிறப்பு அழைப்பாளர்கள் ஆயிரம்பட்டி தொழிலதிபர் எம்.சி.முருகேசபாண்டியன்தூத்துக்குடி தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பொன் பாண்டி ரவி முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை MST மாதாநகர் கபடி குழுவினர் மற்றும் விழாக்குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். கோவில் அன்னதானத்தில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களுக்குதங்க நாணயமும், இரண்டாம் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு வெள்ளி நாணயமும் வழங்கி பாராட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து 03.09.2026 வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு, ஆலயத்தின் சார்பாக மாபெரும் இன்னிசை விழாவில், பாடகர் S.R. சந்திரன் தலைமையில் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பாடகர்கள் மற்றும் கலைஞர்களின் இசை நிகழ்ச்சியை பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அம்மன் அருளைப் பெறுமாறு விழாக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## அல்லானூர் கிராமத்தில் செல்லியம்மன் திருக்கோவில் அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் அடுத்த எலப்பாக்கம் அருகே உள்ள அல்லானூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ செல்லியம்மன் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

29- ஆம் தேதி காலை விநாயகர் பூஜை, கலச பூஜை, கணபதி மற்றும் நவகிரஹ ஹோமங்களுடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து இன்று காலை இரண்டாம் கால யாகசாலையுடன் தொடங்கியது இதனைத் தொடர்ந்து மகா பூர்ணாஹுதி செய்யப்பட்டு யாகசாலையில் இருந்து கலசங்கள் விமான கோபுர கலசத்திற்கு மேளதாளங்கள் முழங்க எடுத்து செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க சிவாச்சாரியார்கள் கோபுர கலசத்தில் புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது இதனைத் தொடர்ந்து ஸ்ரீ செல்லியம்மனுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது இந்த கும்பாபிஷேகவிழாவில் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## கோவை இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திறன் 1.0 ஹேக்கத்தான் போட்டி

### தொடர்ந்து 36 மணி நேரம் நடைபெற்றதில் 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் குழுவாக ஆர்வமுடன் பங்கேற்பு

கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களின் புதுமைச் சிந்தனை, தொழில்நுட்பத் திறன் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறனை ஊக்குவிக்கும் நோக்கில் கல்லூரி சார்பில் உள்நாட்டு ஹேக்கத்தான் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக திறன் 1.0 ஹேக்கத்தான் போட்டி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது...

குறிப்பாக 36 மணி நேர தொடர் ஹேக்கத்தானாக நடைபெற்றஇதல்,.வழக்கமான வகுப்பறைச் சூழலைத் தாண்டி, மாணவர்கள் தொடர்ந்து 36 மணி நேரம் தங்கள் குழுவினருடன் இணைந்து சிந்தித்து, திட்டமிட்டு, செயல்படுத்தி, சோதனை செய்து, தங்களது தீர்வுகளை முன்வைக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.



ஹேக்கத்தானில் கணினி சார்ந்த படிப்புகளைப்பயிலும்மாணவர்களுடன், தகவல் தொழில்நுட்பம் சாராத பிற துறைகளைச் சேர்ந்த மாணவர்களும் இணைந்து பங்கேற்றனர். தலா 6 மாணவர்கள் கொண்ட குழுக்களாகப் பிரிந்து, வழங்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பல்வேறு புதுமையான யோசனைகளை மாணவர்கள் முன்வைத்தனர்.

இறுதியாக மாணவர்கள் உருவாக்கிய தீர்வுகளை தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய குழுவினர் மதிப்பீடு செய்து சிறந்த புதுமையான தீர்வுகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள்,மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.. பரிசளிப்பு விழாவில்,இந்துஸ்தான் குழும நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், செயலாளர் மற்றும் நிர்வாகஅறங்காவலர் டாக்டர் பிரியா ,, கல்லூரி முதல்வர் மற்றும் நிகழ்ச்சியின் தலைவரான டாக்டர் பொன்னுசாமி ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கி கவுரவித்தனர்...

நிகழ்ச்சியை தகவல் தொழில்நுட்பத் துறைத் தலைவர் டாக்டர் சரவணன்,, துறையின் இணைப் பேராசிரியர்களான டாக்டர் கௌரி மற்றும் டாக்டர் சிவபிரிந்தா உட்பட ,பல்வேறு துறைகளின் தலைவர்கள்,பேராசிரியர்கள் ஒருங்கிணைந்து இணைந்து நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர்.

## பெருந்துறையில் வி.சி.க. தலைவரின் பிறந்தநாள் விழா: இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் குடிநீர் பிரச்சனை குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றம்!



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரிய வீரசங்கிலி பஞ்சாயத்து கிரே நகரில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனின் 64-வது பிறந்தநாள் விழா விசிக மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் தலைமையில், இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்டத் துணைச் செயலாளர் விவேக் (என்ற) ஜெரோம் மற்றும் ஒன்றியச் செயலாளர் சரண்குமார் ஆகியோர் முன்னிலையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. முன்னதாக நிகழ்விடத்திற்கு வருகை தந்த மாவட்டச் செயலாளர் வி. விஜயபாலனுக்கு கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து கட்சி கொடியேற்றி, கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ந்தனர்.

இவ்விழாவில் பெருந்துறை வடக்கு ஒன்றியச் செயலாளர் தம்பி குமார்,சென்னிமலை ஒன்றிய துணைச் செயலாளர் ஜெபராஜ், சென்னிமலை நகரச் செயலாளர் விஜயா,பேரூர் செயலாளர் லதா மணி, பேரூர் துணைச் செயலாளர் சின்னசாமி, பேரூர் பொருளாளர் சேகர், ஆமோஸ், சாமுவேல், மூத்த பொறுப்பாளர் மணி, ரவிக்குமார் உள்ளிட்டப் பொறுப்பாளர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் போது, பெருந்துறை சட்டமன்றத்தொகுதி முழுவதும் தலைவரின் பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது எனவும்,கிரே நகர் பகுதியில் நீண்டகாலமாக இலவச வீட்டுமனைப் பட்டா இன்றி தவிக்கும் மக்களுக்கு உடனடியாகபட்டாவழங்க அரசிடம் மனு அளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், கடந்த 10 நாட்களாகக் குடிநீர் பற்றாக்குறையால் அவதிப்பட்டு வரும் கிரே நகர் மக்களுக்குச் சீரான குடிநீர் வழங்கக் கோரி மக்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், தொகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் கட்சியின் கொள்கைகள் மற்றும் தமிழ்த்தேசிய விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைச் தீவிரமாக முன்னெடுப்பது என்றும் ஒருமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கோவை விளாங்குறிச்சி பகுதியில் உள்ள ஆர்.ஜே.மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற 20வது ஆண்டு விளையாட்டு விழா போட்டிகள்

### பல்வேறு விளையாட்டு போட்டிகளில் சிறப்பான திறமைகளை வெளிப்படுத்திய மாணவ, மாணவியர்கள்

கோவை விளாங்குறிச்சி பகுதியில், உள்ள ஆர்.ஜெ. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆகஸ்ட் 28 மற்றும் 29 ஆகிய இரு நாட்கள் நடைபெற்ற பள்ளியின், இருபதாம்ஆண்டுவிளையாட்டு விழா போட்டிகள் நடைபெற்றது. துவக்க நாளான நேற்று, சிறுவர்கள் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதனை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மத்திய தொழில் துறை பாதுகாப்பு படையின் மூத்த தளபதி புவனேஸ்வர் தலைமை ஏற்று விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்தார். இரண்டாவது நாளான ,

மாநில பூப்பந்து விளையாட்டு வீரர் சிவகுமார் தலைமை தாங்கி விளையாட்டு போட்டிகளை துவங்கி வைத்தார். ஆர்.ஜே பள்ளியின் தாளாளர் டாக்டர் விஜயலக்ஷ்மி தேசியக் கொடியையும், பள்ளியின் செயலாளர் அனில்குமார் ஒலிம்பிக் கொடியையும், பள்ளி முதல்வர் நிர்மலா பள்ளிக் கொடியையும் ஏற்றி வைத்தார். இதனையடுத்து மாணவர்கள் குழுவாக வந்து அணிவகுப்பு மரியாதை செலுத்தினர். சமாதானத்தின் அடையாளமாக வெள்ளை நிற புறாக்கள் பறக்கவிடப்பட்டு, ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் உடற்பயிற்சிகள், யோகா, பிரமீடு, கராத்தே, சிலம்பம் ஆகிய செய்முறைப் பயிற்சிகள் நடைபெற்றன. இதனை தொடர்ந்து மாணவ மாணவியர்களுக்காட போட்டிகளான நீளம் தாண்டுதல் , உயரம் தாண்டுதல், ஈட்டி எறிதல், வட்டு எறிதல், கோ-கோ, ஓட்டப்பந்தயம், தொடர் ஓட்டப்பந்தயம் ஆகிய பல போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள், கேடயங்கள் பரிசாக வழங்கப்பட்டது. முன்னதாக பள்ளியின் தாளாளர் விஜயலட்சுமி செய்தியாளர்களிடம் கூறியதாவது..



மாணவ மாணவியர்களின் மனதை ஒருநிலை படுத்தவும், அவர்களின் சிந்தனை, செயல்முறைகளை நிலைபடுத்தி, கல்வியில் சிறந்த மாணவர்களாக மாற இந்த விளையாட்டு பயிற்சிகள் பல்வேறு, ஊக்கப்படுத்துகின்றது. இத்தகைய செயல் மாணவ மாணவியர்களின் விளையாட்டு திறன் கற்றல் திறனையும் மேம்படுத்தும் என்று தெரிவித்தார். இந்த விளையாட்டு போட்டிகளில்3வயதுமுதல்17வயது வரையிலான மாணவ மாணவியர்கள் சுமார் 2000த்திற்க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டுள்ளனர் இதில் சுமார் 700க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களுக்குபரிசுகள் வழங்கபட உள்ளது என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடியில் கோலாகலமாக தொடங்கிய மாநில அளவிலான மின்னொளி கபடி போட்டியை முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி: சண்முகபுரம்தாமோதரன் நகரில், முருகேசன் நாடார் நினைவு கோப்பைக்கான 2-ஆம் ஆண்டு மாநில அளவிலான கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான மின்னொளி கபடி போட்டிகள் ஆகஸ்ட் 28, 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மாவட்ட அமெச்சூர் கபடி கழகத்தின் ஆதரவுடன், சண்முகபுரம் கபடி கிளப் மற்றும் தாமோதரன் நகர் சந்தன மாரியம்மன் கோவில் இளைஞர் அணி நண்பர்கள் குழு இணைந்து போட்டிகளை நடத்துகின்றனர்.

முதல் நாள் போட்டியை முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் தொடங்கி வைத்தார். தொடக்க ஆட்டத்தில் சென்னை லயோலா கல்லூரி மற்றும் கரூர் சேரன் கல்லூரி அணிகள் மோதியதில், கரூர் சேரன் கல்லூரி அணி 36-35 என்ற புள்ளிக்கணக்கில் திரில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் தூத்துக்குடி காமராஜ் கல்லூரி அணி, திருச்சி ஆதவன் கல்லூரி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. மற்றொரு போட்டியில் சென்னை லயோலா கல்லூரி அணி வெற்றி பெற்றது.

தொடக்க விழாவில், கபடி போட்டி ஏற்பாட்டாளர் கபடி கந்தன், திமுக மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், அமெச்சூர் கபடி கழக நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இறுதிப் போட்டி: மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி முன்னிலையில், தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் அமெச்சூர் கபடி கழகத் தலைவருமான அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார். வெற்றி பெறும் அணிகளுக்கான பரிசு மற்றும் கோப்பைகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் வழங்க உள்ளார்.

# பெருந்துறை ரயில் நிலையத்தை விரிவுபடுத்தி மேம்படுத்த கோரிக்கை துணை ஜனாதிபதியிடம் கோரிக்கை மனு வழங்கிய ஈரோடு மாவட்ட பாஜக



ஈரோடு மாவட்டம் பெருந்துறை கொங்கு கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக இந்திய துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

விழாவிற்கு வருகை தந்த துணை ஜனாதிபதியை, ஈரோடு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில்மாவட்டத்தலைவர் S.M.செந்தில் தலைமையில் கட்சியின் அனைத்து நிலை நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள் வரவேற்றனர்.

அப்போது, பெருந்துறை பகுதியின் வேகமானவளர்ச்சியைகருத்தில் கொண்டு, பெருந்துறை ரயில் நிலையத்தை விரிவுபடுத்தி, நவீன வசதிகளுடன் மேம்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், ஈரோடு ரயில் நிலையத்திற்கு இணையாக பெருந்துறை ரயில் நிலையத்திலும் அனைத்து முக்கிய ரயில்களும் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பான கோரிக்கை மனுவை இந்திய துணை ஜனாதிபதி C.P.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் ஈரோடு மாவட்ட பாஜக சார்பில் மாவட்ட தலைவர் S.M.செந்தில் வழங்கினர்.

பெருந்துறை பகுதி தற்போது தொழில், கல்வி மற்றும் வணிக ரீதியாக வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பகுதியாக திகழ்கிறது. இந்நிலையில், பெருந்துறை ரயில் நிலையத்தை விரிவுபடுத்தி மேம்படுத்துவதுடன், கூடுதல் ரயில்கள் நின்று செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டால் பொதுமக்கள், மாணவர்கள், தொழிலதிபர்கள்மற்றும்தொழில் நிறுவனங்களுக்கு பெரும் பயன் கிடைக்கும் என ஈரோடு மாவட்ட பாஜக சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு (FATIA) பொதுகுழுக் கூட்டம்



ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுகுழுக்கூட்டம் 30.08.2026 நேற்று ஈரோடு மாநகர் நசியனூர் சாலையில் அமைந்துள்ள ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் அரங்கில் கூட்டமைப்பின் தலைவர் V.K.ராஜமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. FATIA துணைத்தலைவர் S.A.சண்முகசுந்தரம் வரவேற்புரை ஆற்றினார். பொதுச்செயலாளர் P.ரவிச்சந்திரன் ஆண்டறிக்கையை வாசித்தார். பொருளாளர் R.முருகானந்தம் நிதிநிலை ஆண்டறிக்கை வாசித்தார். FATIA இணைச் செயலாளர் C.பழனிசாமி நன்றியுரை ஆற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு.

நேபாளத்தின் வடக்கு எல்லையில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்த சுமார் 500-க்கும் மேற்பட்டோர்க்கு இந்த பொதுக்குழு ஆழ்ந்த இரங்களை தெரிவிக்கப்பட்டது.

நடைபெற்ற 2026 சட்டமன்ற தேர்தலில் மிகப்பெரியவெற்றியைபெற்று தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள C.ஜோசப் விஜய் அவர்களுக்கும் மற்றும் அமைச்சரவை சகாக்களுக்கும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இப்பொதுக்குழு மனம் மகிழ்ந்து நல்வாழ்த்துக்களை தெரிவிக்கப்பட்டது. கடந்த நான்கு மாதங்கள் லஞ்சம் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்கபாடுபடும் தமிழக முதல்வர் அவர்களுக்கும், நத்தம் பட்டா பிரச்சனை குறித்து FATIA-வின் கோரிக்கையை ஏற்று விரைந்து பட்டா கிடைக்க அரசாணை பிறப்பித்த தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் அவர்களுக்கும் FATIA சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கப்பட்டது. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வணிகக் கட்டட அனுமதி வழங்கும் அதிகார வரம்பை தற்போதுள்ள 2,000 சதுர அடியிலிருந்து 5,380 சதுர அடியாக உயர்த்தப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்பிற்கு இணங்க, வணிகக் கட்டடங்களுக்கான அனுமதி பெறுவதை எளிமைப்படுத்தும் வகையில், 1,500 சதுர அடி எப்.எஸ்.ஐ (FSI) பரப்பளவு வரையிலான வணிகக் கட்டடங்களுக்குச் சுயசான்றளிப்பு முறையில் எவ்விதச் சிரமமும் இன்றி விரைவாகப் பொதுமக்கள் அனுமதிபெற்றுப்பயன்பெறும் வகையில் அறிவிப்பு வெளியிட்ட தமிழக முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் இப்பொதுக்குழு ஏகமனதாக நன்றியை தெரிவித்துக்கப்பட்டது.

உலக சமுதாய சேவா சங்கத்தலைவரும், தமிழ் இலக்கிய பேரவை, தலித் மக்களுக்கான சேவை, நுகர்வோர் அமைப்புக்கான சேவை, தேசிய நல விழிப்புணர்வு இயக்கம் போன்றவற்றை ஆரம்பித்து அவற்றை திறம்பட நிர்வகித்து வரும் SKM. மயிலானந்தம் அவர்களின் 25 ஆண்டுகால சமூக சேவைக்கு மத்திய அரசு இதழில் பத்மபூஷன் விருது வழங்கி கௌரவித்தது. அதனை இப்பொதுக்குழு மனப்பூர்வமாக வரவேற்று அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வது

என்பன போன்ற பல முக்கிய தீர்மானங்கள் இப்பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டது.

# கோவை துடியலூர் அடுத்த என்ஜிஜிஒ காலனியில், நடைபெற்ற 6வது மாநில அளவிலான யோகாசன போட்டிகள்

## தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று பல்வேறு ஆசனங்களை செய்து அசத்தினர்



ஆத்மா யோகா சென்டர், டி.பி.கே ஸ்போர்ட்ஸ் அகாடமி, நாயர்ஸ் வித்யா மந்தீர் சிபிஎஸ்இ பள்ளி, ராடன் அறக்கட்டளை மற்றும் நான்முகனார் திருவள்ளுவர் அறக்கட்டளை இணைந்து நடத்திய 6வது மாநில அளவிலான யோகாசன போட்டிகள் 2026. கோவை துடியலூர் அடுத்த, என்ஜிஜிஒ காலனி பகுதியில் உள்ள நாயர்ஸ் வித்யா மந்தீர் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நான்முகனார் திருவள்ளுவர் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் திருநாவுக்கரசு தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக, ராடன் அறக்கட்டளையின் நிர்வாகஇயக்குநர்லீமோனி கிருஷ்ணா கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்தார். இந்த போட்டிகளில் கலந்து கொள்ள தமிழகத்தின் பல்வேறு பகுதிகளான சேலம், திருப்பூர், மேட்டுப்பாளையம், கோவை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையில் உள்ள பள்ளி குழந்தைகள் இதில் பங்கேற்றனர். இவர்களுக்கு யோகா போட்டிகளில், காமன், மற்றும் சிறப்பு போட்டிகள் என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்த பட்டு வருகிறது.

இதில் மாணவ மாணவியர்கள், பச்சி முகத்தாசனா, ஏகபாதசிரசாசனம், பத்ம பந்தாசனம், சிரசாசனம், சக்ராசனம், உள்ளிட்ட பல்வேறு ஆசனங்களை மாணவ மாணவியர்கள் செய்து அசத்தினர். இவர்களில் சிறப்பாக செயல்பட்ட பள்ளி குழந்தைகளுக்கு சான்றிதழ், பதக்கங்கள், கோப்பைகள், வழங்க பட்டது. இதனை தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்துபேசிய யோகா பயிற்சி ஆசிரியர் திருநாவுக்கரசு கூறியதாவது..

மாணவ மாணவியர்கள் தாங்கள் கற்று கொண்டுள்ள யோகா பயிற்சிகளை, இத்தகைய தேர்வுமூலமாகவெளிபடுத்தும் பொழுது, மாணவ மாணவியர்கள் கற்ற பல்வேறு கலைகளை மறுசீரமைப்பு செய்யவும், அவர்கள் அவர்களையே திருத்தி கொள்ள ஒரு வாய்ப்பாகவும் அமையும் என்றார். இதற்காக கோவையில் கடந்த 5 ஆண்டுகளாக மாநில அளவிலான போட்டிகளை நடத்தி வருகின்றோம் இந்த ஆண்டு 6வது ஆண்டாக நடைபெற்று வருகிறது. இதில் சிறந்த முறையில் யோகாசன பயிற்சிகளை செய்யும் மாணவ மாணவியர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ள நல்வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்தார். இன்றைய கால கட்டத்தில் மாணவ மாணவியர்களின் மனதை கட்டுபடுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் தான் பள்ளி மாணவ மாணவியர்கள் பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். மாணவ மாணவியர்களின் மனதைஒருநிலைபடுத்த இத்தகைய யோகா போட்டிகள் நல்ல தீர்வாக அமைவதுடன், சமுதாயத்தில் நல்ல மாணவர்களாக அவர்களை உருவாக்க முடியும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் டிபிகே ஸ்போர்ட்ஸ் அகாடமியின் இயக்குநர் பிரதீப், நிர்வாக இயக்குநர் காவேரி, மற்றும் நாயர்ஸ் பள்ளியின் தலைமை ஆசிரியர் பிரியா, கோல்டன் ஸ்டார் அகாடமி நிர்வாக இயக்குநர் சதிஷ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# China removes general who commanded forces during Galwan, Doklam standoffs with India: Who is Zhao Zongqi?



*China has removed one of its key military commanders – who oversaw forces during the Doklam standoff in 2017 and the Galwan clashes in 2020 amid border tensions with India – from its top political advisory body.*

*Zongqi, the former commander of the Western Theatre Command, has been stripped of his membership from the Chinese People's Political Consultative Conference (CPPCC) and removed from two other positions, news agency PTI reported.*

*The former commander had combat experience in the Sino-Vietnamese war, and had handled the India-China border conflicts. Apart from Zongqi, China also removed two senior military officers from its supreme military command body, the state Central Military Commission, state-run Xinhua reported. This was done after investigations into suspected serious violations of discipline and law.*

*Zongqi served as the first commander of China's Western Theater Command, and was handed the military flag by President Xi Jinping in 2016. Prior to that, he was the commander of the Jinan Military Region, and was transferred from there to the Western Command.*

*Having risen through the ranks of war to become a senior PLA general, Zongqi was once the youngest commander among the seven military regions of the People's Liberation Army. He was born in Bin County, Heilongjiang Province in 1955, according to public reports cited by The Paper.*

*Military career*

*Zongqi joined the Chinese military in 1970 at the age of 16, having demonstrated "remarkable resourcefulness and courage at a young age", the report stated. He was later made a reconnaissance squad leader and acting platoon leader, and was ordered to follow his unit to break through the western front of Vietnam when the Sino-Vietnamese War broke out in 1979. He was part of the battles to capture Lao Cai, Cam Duong, and Sa Pa as the head of the reconnaissance section.*

*From 1986 to 1988, Zongqi was recommended to study Arabic at the PLA Foreign Languages Institute, and served as military attaché at the Chinese Embassy in Tanzani after his graduation. In 1989, Zongqi was transferred back to China and served as the chief of staff of a division in a certain unit, The Paper reported. The General Staff ordered the establishment of a modern independent "mountain brigade" in 1990, and Zongqi was made its first brigade commander.*

*He was promoted to deputy chief of staff of the Tibet Military Region in 1998, and later became chief of staff. He served as commander of the 14th and 13th Group Armies, and was elected as a member of the 18th Central Committee of the Communist Party of China and promoted to Commander of the Jinan Military Region.*

# திண்டுக்கல்லில் அடையாளம் தெரியாத வாகனம் மோதிய விபத்தில் 4 சிறுவர்கள் உயிரிழப்பு




திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகே அடையாளம் தெரியாத வாகனம் மோதிய விபத்தில் 4 சிறுவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகேயுள்ள கொல்லம்பட்டி பிரிவில் சாலையோரத்தில் தனுஸ்ரீ(5), யோக வர்ஷி(11). அனன்யா(6) மற்றும் மோசிகீரன்(6) ஆகியோர் ஆடுமேய்த்துக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக அதிவேகமாக வந்த அடையாளம் தெரியாத வேன் ஒன்று, சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த சிறுவர்கள் மீது பயங்கரமாக மோதிவிட்டு நிறுத்தாமல் சென்றுள்ளது. இதில் 4 குழந்தைகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இச்சம்பவம் குறித்து வடமதுரை காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து, விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பியோடிய வாகனத்தையும் அதன் ஓட்டுநரையும் தீவிரமாகத் தேடி வருகின்றனர். இக்கோர விபத்து அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



பிலிப்பைன்ஸ் நாட்டில் செபு நகரில் உள்ள குல்லாஸ் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற பிரம்மாண்ட பட்டமளிப்பு விழா! 1006 மருத்துவ மாணவர்கள் பட்டம் பெற்றனர்! இதில் 700க்கும் மேற்பட்டோர் இந்தியர்கள்! பிலிப்பைன்ஸ் நாட்டின் செபுநகரில் உள்ள குல்லாஸ் மருத்துவ கல்லூரியில் நடைபெற்ற பிரம்மாண்ட பட்டமளிப்பு விழாவில், 1006 மருத்துவ மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.